அனுப்ப வேண்டும். அந்த முறையில் தானாகவே சிவப்பு நாடாத் தன்மை ஏற்பட்டு விடுகிறது. இதனால் 10-15 ஆண்டுகள் ஆனாலும் பட்டா பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த அதிகாரங்களை வட்ட அளவிலே தாசில்தார் அவர்களுக்கே கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போதுள்ள போர்டு ஸ்டான்டிங் ஆர்டர் படி ரூ. 400 மதிப்புள்ள நிலங்களை தாசில்தார் ஒப்படை செய்யலாம், என்று அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதற்கும் அதிகமாக விலையுள்ள மற்ற இடங்களைப் பொறுத்தவரையில், ரூ. 2,000 மதிப்புள்ள நிலங்களை கோட்டாட்சித் தலைவர் ஒப்படை செய்யலாம். ரூ. 5,000 மதிப் புள்ள நிலங்களை மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்படை செய்யலாம், ரூ. 10,000 மதிப் புள்ள நிலங்களை வருவாய்த் துறை வாரியம் ஒப்படை செய்யலாம். அதற்கு மேல் மதிப்புள்ள நிலங்களை அரசாங்கத் தின் அனுமதி பெற்றுத்தான் ஒப்படை செய்ய வேண்டுமென்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட உத்தரவுகள் தேவை என்று அரசு கருதுகிற காரணத்தால் அந்த உத்தரவுகளை மாற்றுவதற்கு முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* 276 வினா—திரு. வீ. செல்லதுரை : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

ஓமலூர் வட்டத்தில் தற்போது சாகுபடி செய்யத்தக்க வகையில் உள்ள பட்டா வழங்கப்படாத தரிசு நிலங்கள் எவ்வளவு உள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஓமலூர் வட்டத்தில் சாகுபடி செய்யத்தக்க அரசுத் தரிசு நிலத்தின் பரப்பளவு சுமார் 800 ஏக்கர். சேலம் உருக்காலைத் திட்டம் தொடர்பாக பிறப்பிக்கப்பட்டுள்ள நில ஒப்படைத் தடை உத்தரவு நடைமுறையில் உள்ளதால் மேற்கூறிய 800 ஏக்காரில் 400 ஏக்கரா நிலங்களை ஒப்படை செய்ய இயலாது.

1973 நவம்பர் 21]

திரு. வீ. செல்லதுரை : மின்சாரத்தினுல் கிராமப்புறங்களில் உள்ள பறி தைக்கும் அரிசனங்கள் வெகுவாக பாதிக்கப் பட்டுள்ளார்கள். அதைப்போல் நாட்டில் ஹிப்பிஸம் வளர்ந்து கொண்டே போவதால் க்ஷவரத் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்தப் பகுதி களில் உள்ள தரிசு நிலங்களை விவசாயம் செய்யப் பகிர்ந்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி எவ்வளவு நிலங்கள் இருக் கின்றன என்பது. அதிலே 400 ஏக்கரா நிலம் ஒப்படை செய்ய லாம், 400 ஏக்கரா செய்ய முடியாது. அந்த 400 ஏக்கரா நிலங்கள் ஏற்கனவே சிவாஜிமா ஆகுபேஷனில் இருந்து வருகிறது. ஸ்தல அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

* 277 வின—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

பென்னலூர்ப்பேட்டை துணை வட்டம், திருக்கண்டலம் கிராமத்தில் உள்ள 'முள்தோப்பு' புறம்போக்கு நிலத்தை வீடற்ற அரிசன மக்களுக்கு ஒப்படை செய்வதில் ஏற்படும் காலதாமதத் திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பென்னலூர்ப் பேட்டை துணை வட்டம், திருக்கண்டலம் கிராமம் "முள் தோப்பு புறம்போக்கு", என்பது 'சித்தேரி வரவுகால் புறம்போக்கு' என்று வருவாய்த்துறை கணக்குகளில் உள்ளது. இந்த நிலத்தை ஒப்படை செய்வது நீர்ப்பாசன வசதிக்கு மிகவும் இடையூருக இருக்கும் என்ற காரணத்தால் இதை ஒப்படை செய்ய இயலாது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, மேற்கண்ட நிலத்தை இரண்டு மூன்று பணக்காரர்கள் சாகுபடி செய்யும் நிலங்களாக பயன் படுத்திக்கொண்டிருக்கிருர்கள். வீட்டு மனைக் குரிய நிலம் வேறு இல்லை. ஆகவே, ஒரு சிறப்பு நடவடிக்கையாக கலெக்டருக்கு உத்தரவிட்டு வீட்டு மனை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?